©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ.1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 45] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 8, 2017
ஐப்பசி 22, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 148, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I 2)த் துறை, 31 ஆகஸ்ட் 2017.]*

1996–ஆம் ஆண்டு கட்டடங்கள் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணிநிலைமைகளும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 27/1996)–62 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் வல்லுநர் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னரும் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு கட்டடங்கள் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணிநிலைமைகளும்) விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

**மேற்சொன்ன விதிகளில்,—**

(1) 23–ஆம் விதியில்,–

(a) துணை விதி (2) இல், ‘‘கேட்பு வரைவோலை ஒன்றின் மூலமாக’’ என்ற சொற்றொடருக்குப் பின்னர், ‘‘அல்லது தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணையதள வலைவாயில் வாயிலாக இணைய முறையில் தொகை செலுத்துகை’’ என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்;

(b) துணை விதி (3)–க்குப் பதிலாக, பின்வருவன அமைத்துக்கொள்ளப்பட வேண்டும் அவையாவன:–

"(3) துணை விதி (1) இல், குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விண்ணப்பமும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணையதள வலைவாயில் வாயிலாக அல்லது பதிவு அலுவலரிடம் நேரடியாக அல்லது பதிவு அஞ்சலில் அவருக்கு அனுப்பப்பட வேண்டும்’’.

(2) விதி 242–இல் ‘‘அத்தகைய நிறுவனம் தொடர்பான கணக்கு விவர அறிக்கை ஒன்று ஆண்டுதோறும் இந்த விதிகளின் விவர அட்டவணை XIII-இன் கீழ் படிவம் XXV-இல் இரு படிகளில் அனுப்பப்பட வேண்டும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக ஒருங்கிணைந்த ஆண்டு விவர அறிக்கை ‘‘தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணையதள வலைவாயில் வாயிலாக இந்த விதிகளின் விவர அட்டவணை XIII-இன் கீழ் படிவம் XXV-இல் அளிக்கப்பட வேண்டும்’’ என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்,

(3) விவர அட்டவணை XIII-இல் உள்ள படிவம் XXV–க்குப் பதிலாக பின்வரும் படிவம் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது :–

**“படிவம் XXV**

(242–ஆம் விதியைக் காண்க)

**வேலையளிப்பவரின் ஒருங்கிணைந்த ஆண்டு விவர அறிக்கை பதிவு அலுவலருக்கு அனுப்பப்பட வேண்டும்.**

டிசம்பர் 31–ஆம் நாளுடன் முடிவடைகிற ஆண்டு....................

**1.** கட்டட கட்டுகிற நிறுவனம் மற்றும் பிற கட்டுமான பணி மேற்கொள்கிற நிறுவனத்தின் முழு பெயர் மற்றும் முகவரி (இடம், அஞ்சலகம், மாவட்டம்).

**2.** நிறுவனத்தின் பெயர் மற்றும் நிரந்தர முகவரி.

**3.** வேலையளிப்பவரின் பெயர் மற்றும் முகவரி.

**4.** மேற்கொள்ளப்படுகிற கட்டடம் கட்டும்பணி அமைப்பு மற்றும் பிற கட்டுமானப் பணியின் தன்மை.

**5.** நிறுவனத்தை மேற்பார்வை செய்வதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்கு பொறுப்புடைய மேலாளர் அல்லது நபரின் முழுப்பெயர்.

**6.** சாதாரணமாகப் பணியமர்த்தப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை.

**7.** அந்த ஆண்டில் கட்டட கட்டுமானத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டிருந்த நாட்களின் மொத்த எண்ணிக்கை.

**8.** அந்த ஆண்டில் பணியாற்றிய கட்டுமானத் தொழிலாளர்களின் மனித உழைப்பு நாட்களின் மொத்த எண்ணிக்கை.

**9.** அந்த ஆண்டில் யாதொரு நாளில் அதிகபட்சமான எண்ணிக்கையில் பணியமர்த்தப்பட்டிருந்த கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை.

**10.** அந்த ஆண்டில் ஏற்பட்ட விபத்துகளின் எண்ணிக்கை வருமாறு :

(a) மொத்த விபத்துகளின் எண்ணிக்கை.

(b) 48 மணி நேரத்திற்கும் குறைவான கால அளவுக்கு கட்டுமானத் தொழிலாளர்கள் ஏலாமையுற்றதற்கு காரணமாக இருந்த விபத்துகளின் எண்ணிக்கை விபத்தில் பாதிக்கப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை மற்றும் மனித உழைப்பு நாட்களில் இழப்பு ஏற்பட்ட நாட்களின் எண்ணிக்கை

(c) 48 மணி நேரத்திற்கும் அப்பால் கட்டுமானத் தொழிலாளர்கள் ஏலாமையுற்றதற்கு ஆனால் யாதொரு ஓரளவு நிலையான அல்லது நிலையான மொத்த ஏலாமையுறுவதற்குக் காரணமாக இராத விபத்துகளின் எண்ணிக்கை விபத்தில் பாதிக்கப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை மற்றும் அத்தகைய விபத்துகளின் காரணமாக மனித உழைப்பு நாட்களில் இழப்பு ஏற்பட்ட நாட்களின் எண்ணிக்கை.

(d) கட்டுமானத் தொழிலாளர்கள் ஓரளவு நிலையான அல்லது மொத்த ஏலாமையுறுவதற்குக் காரணமாக இருந்த விபத்துகளின் எண்ணிக்கை விபத்தில் பாதிக்கப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை மற்றும் அத்தகைய விபத்துகளின் காரணமாக மனித உழைப்பு நாட்களில் இழப்பு ஏற்பட்ட நாட்களின் எண்ணிக்கை

(e) கட்டுமானத் தொழிலாளர்களின் இறப்பு ஏற்படக் காரணமாக இருந்த விபத்துகளின் எண்ணிக்கை அதன் விளைவாக ஏற்பட்ட இறப்புகளின் இறந்துபோன நபர்களின் எண்ணிக்கை.

சட்டத்தின் கீழ் அரசால் நியமிக்கப்பட்ட தலைமை ஆய்வாளர் அல்லது ஆய்வாளர்கள் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் உரிமையாளர்கள் அரசு தொடர்பாக பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் வேலையளிப்பவர்களால் அளிக்கப்பட்ட ஆண்டு விவர அறிக்கையின் நகல்களை சட்டத்தின் 60–ஆம் பிரிவின் விதித்துறைகளின் தன்மையினால் கட்டடங்கள் மற்றும் ஏனைய கட்டுமானப் பணிகளின் ஆய்வுகளின் தலைமை ஆய்வாளருக்கு அனுப்புமாறு அறிவுறுத்த வேண்டும்.

சட்டத்தின் கீழ் அரசால் நியமிக்கப்பட்ட தலைமை ஆய்வாளர் அல்லது ஆய்வாளர்கள் அரசால் நியமனம் செய்யப்பட்ட பதிவு அலுவலர்களால் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவாறான அத்தகைய நிறுவனங்கள் ஆண்டு விவர அறிக்கையின் நகல்களை சட்டத்தின் 60–ஆம் பிரிவின் விதித்துறைகளின் தன்மையினால் தலைமை இயக்குநருக்கு அனுப்புமாறு அறிவுறுத்த வேண்டும்.

**11.** பதிவிற்காக பதிவு அலுவலரிடம் அளிக்கப்படுகிற விண்ணப்பங்களில் நிறுவனத்தின் மேலாண்மை அதன் இடம் அல்லது ஏனைய யாதொரு விவரங்களில் மாற்றம் ஏதேனும் இருப்பின் நாட்களுடன் சேர்த்து அதனையும் குறிப்பிட வேண்டும்.

**12.** (i) பேறுகால பயன்கள் குறித்த விவரங்கள்:

| | *பயன்பெற்ற பணியாளர்களின் எண்ணிக்கை* | *அளிக்கப்பட்ட மொத்த தொகை* |
|---|---|---|
| கருச்சிதைவு : | | |
| பிள்ளைபேற்று நிலையிலிருத்தல் : | | |
| உடல் நலக்குறைவு : | | |
| மருத்துவ மிகை ஊதியம் : | | |
| **மொத்தம்** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (*ii*) | **1961** ஆம் ஆண்டு பேறுகால சலுகைச் சட்டத்தின் **6–**ஆம் பிரிவின் கீழ் அறிவிப்பு அளித்த பெண்களின் எண்ணிக்கை | : | | |
| (*iii*) | பிள்ளைபேற்று நிலையிலிருப்பது குறித்த அறிவிப்பு பெறப்பட்டதன் பேரில் விடுப்பு எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை | : | | |
| (*iv*) | பேறுகால பயன் குறித்து நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகள் | : | எண்ணிக்கை | தொகை வழங்கப்படவில்லை |
| (*v*) | மருத்துவ மிகை ஊதியம் குறித்து நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகள் | : | எண்ணிக்கை | தொகை வழங்கப்படவில்லை |
| (*vi*) | கருச்சிதைவு ஏற்பட்டதன் பேரில் விடுப்பு விண்ணப்பிக்கப்பட்டு ஆனால் நிராகரிக்கப்பட்ட நேர்வுகள் | : | எண்ணிக்கை | தொகை வழங்கப்படவில்லை |
| (*vii*) | **10–**ஆம் பிரிவின் கீழ், உடல் நலமின்மைக்காகக் கூடுதல் விடுப்பு கோரப்பட்டு ஆனால் நிராகரிக்கப்பட்ட நேர்வுகள் | : | எண்ணிக்கை | தொகை வழங்கப்படவில்லை |
| (*viii*) | சம்பந்தப்பட்ட பெண்ணிற்கு நேரடியாக அளிக்காமல் பிறநபர்களுக்குத் தொகை வழங்கிய நேர்வுகள் | : | எண்ணிக்கை | தொகை வழங்கப்படவில்லை |
| (*ix*) | **1961–**ஆம் ஆண்டு பேறுகால பயன் சட்டத்தின் **12–**ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு **(2)–**இன் வரம்பு நிபந்தனையின் கீழ் அளிக்கப்படும் பேறுகாலப் பயன் மற்றும்/அல்லது மருத்துவ மிகை ஊதியத் தொகை கிடைக்கப்பெறாத பெண்கள் | : | எண்ணிக்கை | தொகை வழங்கப்படவில்லை |
| (*x*) | மேல் முறையீட்டு அதிகாரி அல்லது ஆய்வாளரின் உத்தரவின்பேரில் தொகை வழங்கப்பட்ட நேர்வுகள் | : | எண்ணிக்கை | தொகை வழங்கப்படவில்லை |
| (*xi*) | **1961–**ஆம் ஆண்டு பேறுகால பயன் சட்டத்தின் **8–**ஆம் பிரிவின்கீழ் நிருவாகத்தால் கட்டணமின்றி அளிக்கபப்பட்ட பேறுகாலத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை | : | எண்ணிக்கை | தொகை வழங்கப்படவில்லை |

**13.** (i) **1936–**ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **4/1936**) **1–**ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு **(6)–**இன்கீழ் மத்திய அரசால் குறிப்பிடப்பட்ட ஊதியங்களை காட்டிலும் குறைவாக ஊதியம் பெறும் நபர்கள் குறித்த நேர்வில் ஊதியத்தில் செய்யப்பட்ட பிடித்தங்கள் குறித்த விவரங்கள்.

| | *சம்பந்தப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை* | *பிடித்தம் செய்யப்பட்ட மொத்தத் தொகை* |
|---|---|---|
| அபராதங்கள் | | |
| சேதங்கள் / இழப்பு | | |
| ஒப்பந்த மீறுகை | | |
| ஏனையவை | | |
| **மொத்தம்** | | |

(ii) 1936—ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1936) 6—ஆம் பிரிவின்கீழ் மத்திய அரசால் குறிப்பிடப்பட்ட ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக ஊதியம் பெறாத நபர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள்:—

ஆண் :
பெண் :
வளரிளம் பருவத்தினர் :

(*iii*) அளிக்கப்பட்ட பண மதிப்பு சலுகை விவரங்கள் (ரூபாயில்)

(*iv*) 1936—ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1936) 7—ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (2)—இன் கீழ் பிடித்தங்கள் உட்பட வழங்கப்பட்ட மொத்த ஊதியங்கள்.

| *அடிப்படை ஊதியம்* | *அகவிலைப் படிகள்* | *மிகை நேரம்* | *ஆதாயமற்ற மிகை ஊதியப் பகிர்வு* | *ரொக்கமாக வழங்கப்பட்ட பிற படிகள்* | *அந்த ஆண்டில் வழங்கப்பட்ட முந்தைய ஆண்டுக்கான ஊதிய நிலுவை* | *மொத்தம்* |
|---|---|---|---|---|---|---|

(*v*) தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிக்கு வசூலிக்கப்பட்ட அபராதத் தொகைகள் செலுத்தப்பட்டது குறித்த விவரங்கள்:

| | *கேட்பு வரைவோலையின் எண்* | *நாள்* | *வங்கி* | *தொகை ரூ. காசு* |
|---|---|---|---|---|
| 1 ஆம் காலாண்டு | | | | |
| 2 ஆம் காலாண்டு | | | | |
| 3 ஆம் காலாண்டு | | | | |
| 4 ஆம் காலாண்டு | | | | |

(*vi*) பொருளாக வழங்கப்பட்ட ஊதியங்களின் மொத்த ரொக்க மதிப்பு

**14.** கணக்கீட்டு ஆண்டில் வழங்கப்பட்ட மிகை ஊதியம்

| *மிகை ஊதியத் தொகை பெறுவதற்கு தகுதியுடைய பணியாளர்களின் எண்ணிக்கை* | *அறிவிக்கப்பட்ட மிகை ஊதியத்தின் விழுக்காடு* | *வழங்கப்பட்ட மொத்த மிகை ஊதியத் தொகை* | *தொகை வழங்கப்பட்ட நாள்* |
|---|---|---|---|

**15.** ஒப்பந்தத் தொழிலாளர்கள்

| *ஒப்பந்ததாரர்களின் பெயர் மற்றும் முகவரிகள்* | *ஒப்பந்த கால அளவு* | *பணியின் தன்மை* | *பணிபுரிந்த நாட்களின் எண்ணிக்கை* | *பணிபுரிந்த மனித உழைப்பு நாட்களின் எண்ணிக்கை* | *ஒவ்வொரு ஒப்பந்ததாரரால் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் உயரளவு எண்ணிக்கை* |
|---|---|---|---|---|---|

**16.** மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள்

ஒப்பந்ததாரர்களின் பெயர் மற்றும் முகவரி :
ஒப்பந்த கால அளவு :
பணியின் தன்மை :
ஒவ்வொரு ஒப்பந்ததாரரால் பணியமர்த்தப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உயரளவு எண்ணிக்கை :
பணிபுரிந்த நாட்களின் எண்ணிக்கை :
பணிபுரிந்த மனித உழைப்பு நாட்களின் எண்ணிக்கை :

இடம்........................................ வேலை அளிப்பவர்..................................

நாள்..........................................

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்*
*(முழு கூடுதல் பொறுப்பு)*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.